DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SANKARANKOVIL.

Calender --- C.C.50/2019
Miscellaneous ---
Preliminary Register ---

Sessions --- PW2

Deposition of witness for Prosecution
Defence
Case

Name : கோமதி
Father's Name :

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the previsions of Act X of 1873 of the day of

07.06.2024

<u>முதல் விசாரணை:</u>

நான் சங்கரன்கோவிலில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். எதிரியை தெரியும். இறந்த போன சரஸ்வதியை தெரியும். சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு திருநெல்வேலி மெயின் ரோட்டில் உள்ள சின்னகோவிலான்குளம் அருகில் உள்ள சாய்பாபா கோவிலுக்கு நானும் ' இறந்து போன சரஸ்வதி அம்மாவும் இரவு 7.30 மணியளவில் சங்கரன்கோவிலில் இருந்து சென்றோம். சாமி கும்பிட்டு விட்டு இரவு 8.30 மணிக்கு

கோவிலில் இருந்து சங்கரன்கோவில் வருவதற்காக ரோட்டை கடக்கும் போது எதிரி அதிவேகமாக வந்து புல்லட்டை ஓட்டி வந்து எங்கள் வண்டி மீது மோதியதில் சரஸ்வதி அம்மாவுக்கு பலத்த காயம் ஏற்பட்டு கீழே விழுந்து விட்டார். நானும் பைக்கில் வந்தவரும் 108 ஆம்புலன்ஸ் மூலம் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தோம். அங்கு 10 நிமிடத்தில் இறந்து விட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

சம்பவம் நடந்த நாள்அன்று மருத்துவமனையில் போலிசார் விசாரித்தார்கள். சம்பவம் நடந்த அன்று சாய்பாபா கோவிலுக்கு சுமார் இரவு 7.30 மணியளவில் நானும், சரஸ்வதி அம்மாவும், சங்கரன்கோவிலில் இருந்து சென்றோம். நாங்கள் இருவர் மட்டும் தான் சென்றோம். வேறு யாரும் வரவில்லை. அ.சா.1 எனது பக்கத்து வீட்டுக்காரர். விபத்து சம்பந்தமாக நான் என் கணவரிடம் சொன்னேன், அவர் அ.சா.1யிடம் விபத்து குறித்து தகவல் தெரிவித்தார். மேற்படி விசயத்தை நான் போலிசார் விசாரணியல் கூறினேன் என்றால் சரிதான். என் கணவரின்பெயர் சங்கரநாராயணன். நாங்கள் சங்கரன்கோவில் வருவதற்காக பஸ்ஸில் ஏற மேற்புறம் நின்றோம். மேற்படி விசயத்தை நான் போலிசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். நான் மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் சென்றேன். எங்கள் மீது மோதிய பைக்கில் மொத்தம் எத்தனை பேர் வந்தார்கள் என்றால் 2 பேர் வந்தார்கள். விபத்து எத்தனை மணிக்கு நடைபெற்றது என்றால் இரவு 8.30 மணிக்கு நடைபெற்றது. நான் விபத்துநடைபெற்ற உடன் சரஸ்வதியை பார்த்த போது மயங்கி கிடந்தார். பைக்கில் வந்தவர்கள் என்ன நிலைமையில் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் சொன்னவாறு சொன்ன தேதியில் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னாலும், விபத்து நடந்த சமயத்தில் நர்ன சம்பவ இடத்திலேயே இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வயது முதிர்வின்காரணமாக சரஸ்வதி அவர்கள் ரோட்டை கடக்க முயன்ற போது அவர் மயங்கி கீழே விழுந்து அடையாளம் தெரியாத வாகனம் மோதியதில் காயம் ஏற்பட்டதை வைத்து நான் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>(Accused absent 317 petition filed and allowed. )</u>**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SANKARANKOVIL.

| | | |
|---|---|---|
| Calender | --- | C.C.50/2019 |
| Miscellaneous | --- | |
| Preliminary Register | --- | |
| Sessions | --- | PW1 |

Deposition of witness for — Prosecution / Defence / Case

Name : பிரபாகரன் என்ற மோகன்
Father's Name :

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the previsions of Act X of 1873 of the day of

07.06.2024

<u>முதல் விசாரணை:</u>

நான் சங்கரன்கோவிலில் வசித்து வருகிறேன். நான் ஸ்டுடியோ கடை வைத்து நடத்தி வருகிறேன். எதிரியை தெரியும். இறந்த போன சரஸ்வதி எனது அம்மா. 16.02.2017 ம்தேதி இரவு 8.00 மணிக்கு மேல் போன் வந்தது, என்அம்மாவுடன் திருநெல்வேலி மெயின் ரோட்டில் உள்ள சாய்பாபா கோவிலுக்கு கோமதி உடன் சென்றார். கோமதியின் கணவர் எனக்கு போன் செய்து உன் அம்மாவுக்கு சாய் பாபா கோவில் அருகே விபத்து ஏற்பட்டது. சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வருகிறார்கள் என்று கூறினார்கள். நான்

அங்கு சென்று பார்த்த போது எனது அம்மா இறந்து விட்டார். எதிரி பிரபாகரன் அவருடைய பைக்கில் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், வந்து என் அம்மா மீது மோதி விபத்து ஏற்படுடத்தினார். இது குறித்து நடடிவக்கை எடுக்க சின்னகோவிலான்குளம் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னுடையது தான். அந்த புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனுவில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் முதல் விசாரணையில் கூறிய விவரத்தை தான் போலிசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்று சொன்னாலும், சொன்ன விதத்தில் புகார் மனு கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

**<u>(Accused absent 317 petition filed and allowed. )</u>**